**CC.No. 1 /2017**

**Deposition of PW.2**

**Name : chandrasekara nair**

**Dated : 27.11.2019**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

வேளிமலை வனச்சரக அலுவலகம், துவரங்காடு ஜங்சனில் இருந்த விவரம் எனக்கு தெரியும். பொன்மனை பகுதிக்கு வேளிமலை வனச்சரக அலுவலகம் எந்த ஆண்டு மாற்றப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. 05.03.2001 அன்று நான் ஊரக்கோணத்திலிருந்து எனது தனியார் தங்குமிடத்திலிருந்து துவரங்காட்டிற்கு எனது இரு சக்கர வாகனத்தில் வந்து, முக்கூடலுக்கு வந்து பின்னர் சம்பவ இடத்திற்கு போனோம். முக்கூடல் பகுதியிலிருந்து சுமார் 1 கி.மீ வனப்பகுதியில் தணிக்கை செய்து சம்பவ இடத்திற்கு சென்றோம். நான் தணிக்கைக்கு சென்ற விவரங்கள் பற்றி வார நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சம்பவ தினத்தன்று வனச்சரக அலுவலர் விக்டர் பென்னட் ஆவார். வனச்சரக அலுவலர் சம்பவ இடத்தை நான் அழைத்து சென்று அடையாளம் காட்டவில்லை. ஆஜர் எதிரியை தவிர மற்ற எதிரிகள், எந்த திசையில் போனார்கள் என்று சரியாக சொல்லமுடியாது. எருமைப்பட்டி வழியாக போயிருக்கலாம். அப்பொழுது யாரிடம் வாள் இருந்தது என்று, எனச் சொல்லமுடியாது. ஏனென்றால் அப்பொழுது இருட்டாக இருந்தது. ஆஜர் எதிரி சஜேந்திரனுக்கும் அந்த விவரம் தெரியாது. எருமைப்பட்டியில் தனியாருக்கு சொந்தமான தோட்டங்கள் வனப்பகுதியை ஒட்டி அமைந்துள்ளன. எருமைப்பட்டியில் சாஸ்தா கோவில் உள்ளது அதனைச் சுற்றியும் தனியார் ரப்பர் தோட்டங்கள் உள்ளன. பொதுவாக ரப்பர் பால் வெட்டும் தொழிலாளர்கள் இருப்பார்கள் என்றால், சரிதான். வாழைகுழியிலிருந்து எருமைப்பட்டி வரை வழக்கு சொத்துக்களை யார் சுமந்து வந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. வனவர் முருகன், புஸ்பராஜ்க்குத்தான் தெரியும். வழக்கு சம்பந்தமாக அ.சா.1 புஸ்பராஜ் ஒப்புதல் வாக்குமூலம் ஸ்தலமகஜர் ஆகியவற்றை நான் கையெழுத்து செய்தேனா என்று எனக்கு நினைவில் இல்லை. அந்த ஆவணங்களில் வேறு யாராவது கையெழுத்து செய்தார்களா என்ற விவரம் எனக்கு நினைவில் இல்லை. சம்பவ இடத்தில் 5 வெட்டுமோடுகள் இருந்தன. அவற்றிற்கு இடையே சுமார் 50 அடி தூரம்தான் இருக்கும். வெட்டுமோடுகளிலிருந்து சுமார் 200 அடி தூரத்தில்

எதிரியை கைது செய்தோம். ஒரு மரத்தில் ஒரு துண்டு வீதம் 5 மரத்துண்டுகள் மட்டும் எதிரிகள் எடுத்து வந்தார்கள். அந்த மரத்துண்டுகளை மட்டும் கைப்பற்றினோம். மற்ற மரத்துண்டுகள் சம்பவ இடத்திலேயே இருந்தது. கைப்பற்றபட்ட மரத்துண்டுகளை தவிர, மற்ற மரத்துண்டுகள் சம்பவ இடத்தில் இருந்த்தால் அதைப்பற்றி வழக்கு ஆவணங்கள் மற்றும் ஸ்தலமகஜரில் குறிப்பிடுவோம் என்றால்,சரிதான். ஆனால் இந்த வழக்கில் ஸ்தலமகஜரில் அவ்வாறு மற்ற மரத்துண்டுகளைப் பற்றி குறிப்பிடவில்லை என்றால், சாட்சி அ.சா.ஆ.1 பார்த்துவிட்டு இல்லை என்று குறிப்பிடுகிறார். நான் பார்த்த, எதிரிகள் தூக்கிகொண்டு வந்த மரக்கட்டைகள் 4 முதல் 6 அடிகள் நீளம் இருக்கும். யார் மரங்களை வாள் கொண்டு அறுத்தார்கள் என்றால், 5 எதிரிகள் சேர்ந்து வாளால் அறுத்தார்கள். இந்த விவரம் ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. எதிரியை வனவர் முருகனும், புஸ்பராஜீம்தான் வனச்சரக அலுவலக அலுவலகத்திற்கு அழைத்து வந்தார்கள். நான் வேறு வேலை இருந்ததால் 9.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து சென்று விட்டேன். மரத்துண்டுகளை யார் எப்படி வனச்சரக அலுவலகத்திற்கு கொண்டுவந்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. இந்த வழக்கில் 'அ' படிவம் தயார் செய்தபோது எல்லா வழக்கு ஆவணங்கயையும் பார்த்தேன். நான் 05.03.2001 அன்று சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சம்பவம்பற்றி முறையாக விசாரணை செய்யாமல், வனத்துறை அலுவலர்கள் தயார் செய்த தவறுதலான ஆவணங்களின் அடிப்படையில், ஆஜர் எதிரிக்கு எதிராக தவறுதலாக 'ஏ' படிவம் பதிவு செய்துள்ளேன் என்றால், சரியல்ல.